
# சிலுவையின்மூலம் ஆவியானவரால் கிறிஸ்துவில் மறுபடைப்பு -15

வேத வாசிப்பு: *ரோமர் 6:14; 7:17, 20; 8:12-13; 1 கொரி. 11:1, 28; 2 கொரி. 5:17; 13:5; கலா. 2:20; 5:16-25; எபே. 2:10, 15; 5:1; கொலோ. 1:29; 2:20-3:4; எபி. 12:6, 10; 2 பேதுரு 1:3-11; ஏசாயா 64:4*




இரட்சிப்பு என்பது தேவனால் புறக்கணிக்கப்பட்ட இனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இனத்துக்குள் கொண்டுவரப்படுவதாகும் என்று 8ஆம் அதிகாரத்தில் நாம் பார்த்தோம். இது தொடர்பாக கொலோசெயர் 3:9-10யையும், எபேசியர் 4:22-24யையும் நாம் பார்த்தோம்.

இந்த இரண்டு வசனங்களிலுமுள்ள "படைத்தார்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள். "**படைக்கப் பட்ட...**புதிய மனிதனைத் தரித்துக்கொள்ளுங்கள்" (கொலோ. 3:10; எபே. 4:24). கிறிஸ்தவர்கள் தேவ னுடைய குமாரனின் சாயலில் மறுபடி படைக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று பல வசனங்கள் கூறுகின்றன.

ஆனால், இந்த அற்புதம் நாம் வாழ்க்கையில் உண்மையாகவே எப்படி நடைபெறுகிறது? நாம் கிறிஸ்துவில் எப்படி மறுபடி படைக்கப்படுகிறோம்? நாம் எப்படி அவரைப்போல் ஆக்கப்படுகிறோம்?

முதலாவது, இந்தக் காரியத்தில் எந்த வகையிலும் உதவாத மூன்று காரியங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்; சொல்லப்போனால் இந்தக் காரியங்கள் இதற்குத் தடைகளாக இருந்து, நம்மைத் தவறான வழியில் நடத்திச்செல்லக்கூடியவை.

1) **தற்பரிசோதனை**-நம் உள்ளத்தை, நம் பாவத்தன்மையை (அல்லது வெற்றியும், முன்னேற்றமும் போலத் தோன்றுபவைகளை) நாம் ஆய்வுசெய்வது அல்லது நம்மை நாமே பகுத்தாராய்வது அல் லது நம் உணர்ச்சிகளைச் சார்ந்திருப்பது அல்லது நம் உணர்ச்சிகளின்படி நடப்பது. இது கடுமையான தவறு. இதன் விளைவாக மனச்சோர்வும், மனஅழுத்தமும் ஏற்படும் அல்லது பொய்யான நிச்சயமும் பெருமையும் ஏற்படும் அல்லது இதில் ஈடுபடுபவன் வஞ்சிக்கப்படுவான். எல்லா நேரமும் நாம் நம் இருதயக் கண்களை ஆண்டவராகிய இயேசுவில் மட்டுமே பதிக்க வேண்டும்; கிருபாசனத்தில் வீற்றிருக் கும் அவரையே வெளிநோக்கியும், மேல்நோக்கியும் பார்க்க வேண்டும். புறத்தூண்டுதலின்றி தானாய் மனதில் எழுகின்ற எந்த வகையான அகநிலையாக, உள்ளுணர்வுசார்ந்த நிலையாக, இருந்தாலும் அது நம்மைத் தவறான பாதையிலேயே நடத்தும். ஆரோக்கியமான முறையில் நாம் நம்மைப் பரிசோதித் துப்பார்க்கக் கூடாது என்று நாம் சொல்லவில்லை. "*நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்,*" என்று வேதாகமம் கூறு

கிறது. மாறாக, நம்மைச் சேதப்படுத்தும் அளவுக்கு நம் 'அனுபவத்திலும்', நம் 'உணர்ச்சியிலும்', 'நம் ஆவிக்குரிய நிலைமையிலும், நம்மிலும் மூழ்கிவிடுவதைப்பற்றிச் சொல்கிறோம்.

2. **கிறிஸ்துவைப்போல் பாவனைசெய்தல்**-கிறிஸ்துவைப்போல் இருக்க, கிறிஸ்துவைக் 'காப்பி' அடிக்க, நம் சொந்த முயற்சிகளால் நம்மை மாற்றுவதற்கு முயல்வதால் நாம் எதையும் சாதிக்கப் போவதில்லை. நிச்சயமாக, அவருடைய முன்மாதிரிகள் வேதவாக்கியங்களில் நமக்குமுன் தெளிவாக இருக்கின்றன. நாம் "*பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாக வேண்டும்*" என்று நமக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது; ஆனால், அது நம் சொந்த முயற்சியால் அல்ல, மாறாக அது நமக்கு ஆற்றலளிக்கும் கிருபையால்தான் சாத்தியம். நாம் "*நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட் டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம்,*" என்று வேதாகமம் சொல்கிறது. நம்மைக் கிறிஸ்துவைப் போல் மாற்றுவதற்கு நாம் கர்த்தரை நம்பி அவருடன் முனைப்புடன் ஒத்துழைப்பதைத்தவிர வேறொன்றும் செய்ய முடியாது. அவர் நம்மை நம் ஆள்தத்துவத்தின் ஆழங்களில் மாற்றுவார் என்று நாம் அவரை நம்ப வேண்டும். உண்மையாகவே நாம் கர்த்தரைச் சார்ந்து, அவருடன் நேர்மறையாக ஒத்துழைக்க வேண்டியது மிக அவசியம். நம் விருப்பங்கள் முற்றிலும் கர்த்தருக்காக இருக்க வேண் டும். நம் முழு இருதயத்தோடு அவருக்கு மாறுத்தரம் கொடுக்கவேண்டியது அவசியம். ஆனால், இது அவரைப்போல் இருக்க வேண்டும் என்பதற்காக நாம் செய்கிற மிகச் சிறந்த முயற்சியைவிட முற்றிலும் வேறுபட்டது.

3) **சந்நியாசம்**-நம்மைக் கடுமையாகத் தண்டித்து நம் பாவத்தன்மையை ஏதோவொரு வகையில் 'கொல்வதற்காக' எடுக்கும் இன்னொரு வீண் முயற்சி. "இது நம்மை நாம் வெறுப்பதும், மறுப்பதும் தானே! வேதம் இதை வரவேற்கிறதே" என்று சிலர் சொல்லலாம். இந்த மறுத்தல் நாம் சிலுவையை எடுத்துக்கொண்டு கிறிஸ்துவைப் பின்பற்றும்போது நமக்கு நாம் சொல்கிற "இல்லை" என்பதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. நாம் செய்ய விரும்புகிற ஒன்றைச் செய்யாமல் போவதிலோ, சிரிப்பது பாவம் என்பதுபோல ஒருவகையான பக்திநிறைந்த முகத்தை வைத்துக்கொள்வதிலோ எந்தப் புண்ணியமும் இல்லை. ஆவிக்குரிய முன்னேற்றம் வேண்டும் என்பதற்காக எண்ணிலடங்கா மக்கள் இப்படி நினைத்து, இந்த உலகத்தில் இயல்பான இல்லற வாழ்க்கை வாழ்வதைவிட்டு ஒதுங்கி, ஒருவகையான துறவற வாழ்க்கையை சிரத்தையோடு பின்பற்றியிருக்கிறார்கள். ஆனால், உண்மையான சுய-ஒழுக்கம், சுய-கட்டுப்பாடு தேவனுடைய சித்தத்துக்கு மகிழ்ச்சியுடன் கீழ்ப்படிகிற வாழ்க்கை யாகும்; இது ஆவியான வரின் கனி; இது நம்மில் இருக்கிற கிறிஸ்துவினுடைய ஜீவனின் வெளியாக்கம். இதை ஆவியானவர் மட்டுமே நம்மில் உருவாக்க முடியும்; இது நாம் கர்த்தருடன் ஒத்துழைக்கும்போது இது நம்மில் உருவாகும். பேதுரு சொல்வதுபோல உண்மையாகவே நாம், "*நம் விசுவாசத்தோடே இச்சையடக்கத் தையும்*" வேறு பல நற்பண்புகளையும் கூட்டுவதற்கு முயல வேண்டும்; ஆனால், ஏதோவொரு வகையில் நம் '*மாம்சத்தைச் சிலுவையில் அறைவதற்கு*' முயல்வதால் எந்தப் பயனும் இல்லை. நாம் 'சிலுவையில்' கிறிஸ்துவுடனேகூட **மரித்தோம்**. மேலும், உண்மையாகவே நாம் கிறிஸ்துவைப்போல் வெறுமனே ஒப்பனை செய்துகொண்டிருக்கையில் ஆவிக்குரிய வகையில் நாம் முன்னேறிக்கொண் டிருக்கிறோம் என்று நினைத்து நம்மை நாமே வஞ்சித்துக்கொள்ளக்கூடிய ஆபத்து இருக்கிறது.

நம் அன்றாட வாழ்க்கையிலும், அனுபவத்திலும் சிலுவை என்றால் என்னவென்று நமக்கு விளக்கிக் காண்பிப்பதின்மூலம் கர்த்தர் இந்த அற்புதத்தைச் செய்கிறார். நாம் இதை உணரும்போது, சேதப் படுத்தும் தற்பரிசோதனையிலிருந்தும், நம் 'மாம்சத்தைச் சிலுவையில் அறைவதற்கு' நாம் எடுக்கும் வீண் முயற்சிகளிலிருந்தும், 'கிறிஸ்துவைப்போல்' இருக்க பாவனை செய்வதிலிருந்தும் நாம் காப்பாற் றப்படுவோம். இது நம் வாழ்க்கையிலிருந்து எல்லா இறுக்கத்தையும் எடுத்துவிடும். அவருடைய வார்த்தையினால் ஆளப்பட்டு, அவருடைய ஆவியானவருக்கு மாறுத்தரம் கொடுக்க வேண்டியதே நம் வேலை. எப்போதெல்லாம் நாம் சுயநலவாதியாக இருக்கிறோமோ அல்லது நம் நடத்தையில் கிறிஸ்து வின் குணத்துக்கு முரணாக நடக்கிறோமோ அல்லது நாம் நம் சொந்த வழியில் நடக்கிறோமோ, அப்போது "*நாம் மரித்தோம்; நம் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது,*" என்ற உண்மையை அவர் நமக்கு நினைப்பூட்டி, நாம் அவருக்குக் கீழ்ப்படியுமாறும், ஒத்துழைக்குமாறும் கோருவார்.

பின்வரும் காரியங்களை நாம் கண்டுணர்ந்து, ஒப்புக்கொள்ள வேண்டும்;

*1)* நம்மில், நம் இரத்தத்தில், "*பாவம் வாழ்கிறது.*" இது பகுத்தாராயமுடியாத அளவுக்கு ஆழமானது; கலப்படமான நம் உள்நோக்கங்களும் இதில் அடங்கும். இதை 'சுயத்தை மையமாகக்கொண்ட மனிதத் தன்மை' என்றழைக்கலாம். இது போக வேண்டும்; இது சாக வேண்டும்;

*2)* ஆகையால் நாம் "*அவருடைய பரிசுத்தத்தில் பங்குபெறுவதற்காக*" தனிப்பட்டமுறையில் ஒவ்வொரு வரும் விடுதலையாக்கப்பட்டு, மறுவுருவாக்கப்படுவதற்குத் தேவையென்று கர்த்தர் கருதுகிறபடி 'சிலுவையின்வழியாக', அதாவது இப்படிப்பட்ட அனுபவங்களின்வழியாக நாம் கடந்துபோக வேண்டும். சுயத்தை மையமாகக்கொண்ட மனிதத்தன்மை ஒருபோதும் சிலுவையின்வழியாகக் கடந்துபோக முடியாது. பரலோகத்தில் சுயநலம் இல்லை. சிலுவை ஒரு வடிகட்டிபோல் செயல்படுகிறது என்று சொல்லலாம். நாம் இருக்கிறபடியே நம்மை விட்டுச்செல்ல பரிசுத்த ஆவியானவர் விரும்பவில்லை. நடைமுறைக்குரிய அன்றாட வாழ்க்கையில் அவர் சிலுவையைப் பிரயோகிக்கிறார். நம் இருதயத்தில் மிக ஆழமாக வேர்கொண்டிருக்கிற சுயநலத்தை வடிகட்டி அழிப்பதற்கு, அவர் நம் ஒவ்வொருவரையும் முழுமையாக அறிந்திருப்பதின்படி, நம்மைப் பரீட்சிக்கக்கூடிய சூழ்நிலைகளுக்குள் நம்மைக் கொண்டு வருவார். ஆண்டவராகிய இயேசுவின் ஜீவனும், குணமும் நம்மில் வளர்வதற்கு அவர் தளத்தைச் சுத்தம்செய்ய வேண்டும். இந்த நோக்கத்திற்காக அவர் நம்மைத் தம் கரத்தில் எடுத்துக்கொள்வார். சுயநலம் தன்னைப் பல்வேறு வழிகளில் காண்பிக்கிறது. ஆத்திரம், பிடிவாதம், பெருமைபோன்ற வெளிப்படையான காரியங்களில் மட்டுமல்ல, சுய-பரிதாபம், பொய்யான தாழ்மை, ஏக்கம்போன்ற காரியங்களிலும் அது தெரிகிறது. நம் துல்லியமான நிலைமையும், அதற்குத் தேவையான சிகிச்சையும் கர்த்தருக்குத் தெரியும். இதை யோசேப்பு, மோசே, தாவீது, பேதுரு, பவுல் போன்றவர்களின் முழு வாழ்க்கைச் சித்திரத்தில் நாம் பார்க்கலாம். "*கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ, அவனை அவர் சிட்சிக்கிறார்.*"

ஆனால், முக்கியமான எல்லா சத்தியங்களையும்போல, இதையும் தவறாகப் புரிந்துகொள்ளமுடியும் அல்லது அளவுக்கு அதிகமாக ஒரே போக்கில் கொண்டுசெல்லவும் முடியும். இரண்டு காரியங்களை நாம் நினைவில்கொள்ள வேண்டும்;

*1)* தேவன் நம் ஒவ்வொருவருக்கும் தந்திருக்கும் தனித்தன்மை சேதமின்றிப் பாதுகாப்பாக இருக் கிறது. நம் சுயநலம்தான் அழிக்கப்படுகிறது. நாம் எப்போதும் நாமாகவே இருப்போம். ஏனென்றால் நம் தேவன் நமமைப் படைத்தவரும், மீண்டும் படைத்தவருமாவார். நாம் மெய்யாகவே மனிதர்கள், ஒழுக்கப்பொறுப்புள்ள மனிதர்கள் என்ற முறையிலேயே அவர் எப்போதும் நம்மோடு இடைப்படுகிறார். நம்மிலிருந்து சுயநலம் அகற்றப்பட வேண்டும்; அதனால் நாம் நாமாக இல்லாமல் போய் விடுவ தில்லை. இங்கு வேதாகமத்தின் சமநிலையைப் பராமரிப்பது மிகவும் முக்கியம். கிறிஸ்து நம்மை அகற்றிவிட்டுப் அந்த இடத்தை அவர் எடுத்துக்கொள்வதில்லை; நாம் வெற்றிடங்களாக மாறிவிடுவ தில்லை. "*கிறிஸ்து **என்னில்** வாழ்கிறார்,*" என்று பவுல் சொல்கிறார். இது 'புதிய பவுல்', மறுபடி படைக்கப்பட்ட பவுல், இந்தப் பவுலில்தான் கிறிஸ்து வாழ்கிறார்; "*சிலுவையில் அறையப்பட்ட*" பழைய பவுலில் அல்ல. இருந்தபோதும், இது இன்னும் உண்மையாகவே பவுல்தான். பாவத்தின் காரணமாக நாமெல்லாரும் கேலிச்சித்திரங்களைப்போல்தான் இருக்கிறோம். ஒருநாள், தேவன் கருதினபடி, கிறிஸ்துவில் நாம் மெய்யாகவே நாமாகவே இருப்போம்;

*2)* தேவனே எல்லாவற்றையும் செய்வார் என்று எதிர்பார்த்து நாம் எதுவும் செய்யாமல் மந்தமாக இருக்கக் கூடாது. அவர் செய்யமாட்டார். எடுத்துக்காட்டாக ஜெபம், வேத வாசிப்பு, மற்ற பரிசுத்த வான்களுடன் ஐக்கியம் போன்றவைகள்மூலம் அவருடன் சுறுசுறுப்புடன் ஒத்துழைக்க வேண்டும். நாம் பணியாள்போல் பணிபுரிவதற்கும், கர்த்தருக்காகக் காத்திருப்பதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது உண்மைதான். ஆனால், வேதாகமத்தில், காத்திருத்தல் என்பது எப்போதும் எதிர்நோக்கி யிருக்கிற மனப்பாங்காகும். ஏனென்றால், "*அவருக்காகக் காத்திருப்பவர்களுக்காக அவர் கிரியை செய்கிறார்.*" அவர் நெடுங்காலம் நம்மைக் காத்திருக்கச் செய்வதுபோல் தோன்றுவது, நம் இரு தயங்களை உறுதியாய்ப் பிடிப்பதற்காகவும், நமக்கு அவரையும் அவருடைய வழிகளையும் இன்னும் கொஞ்சம் கற்பிப்பதற்காகவுமே.